**Deposition of witness**
**(Chapter XXIII code of Criminal Procedure)**
**In the court of Judicial Magistrate No.I, Tindivanam.**

**CASE NO. CC. 466/2025 PW- 6**

Name : Thiru. Ranganthan, SSI of Police
Father / Husband name : Subburayan
Village : Brammadesam Police Station
Age : 53
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 16.03.2025

Accused present. Defence Counsel present. APP absent. Witness identified by HC2947.

**முதல் விசாரணை** :

நான் தற்போது பிரம்மதேசம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.03.2025 தேதி அன்று திண்டிவனம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் போது திண்டிவனம் அரசு பொது மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று திண்டிவனம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கஸ்தூாரி என்பவரை விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பெற்று காலை 10.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற. எண். 119/2025, 281, 125(a) BNS ன் கீழ் வழக்கு பதிவு செய்து வாதியின் புகார் மனுவினை இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் அன்றைய தினமே காலை 11.30 மணியளவில் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுந்தர் மற்றும் வசந்த் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். பார்வை மகஜரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த **பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ. 5 ஆகவும், அ.சா. ஆ. 6** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கின் சம்பவ சாட்சிகளான அரங்கநாதன், பூபாலன், பிரபு ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவத்தின் தொடர்புடைய PY-01-BL-5989 வாகனத்தின்

ஓட்டுனரை தேடி செல்ல அவர் தலைமறைவாக இருந்ததார். பின்னர் 25.04.2025 அன்று மேற்படி வாகன ஓட்டுனர் எதிரி ஞானமூர்த்தி காவல் நிலையம் முன்பு ஆஜரானவரை காரணம் கூறி கைது தக்க இருநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். பின்னர் அன்றைய தினமே மேற்படி வாகனத்தை விபத்திற்கான காரணத்தை தெரியும் பொறுட்டு மோட்டார் வாகன ஆய்விற்கு உட்படுத்தினேன். பின்னர் 01.05.2025 ம் தேதி மேற்படி வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு. முருகவேல் என்பவரை விசாரணை செய்து வாகன ஆய்வறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த ஆய்வு அறிக்கை அ.சா. ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. விபத்தில் காயம்பட்ட அ.சா. 1 கஸ்தூரி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திருமதி. மோனிசா என்பவரை விசாரணை செய்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். **அந்த விபத்து பதிவேட்டுன் கூடிய காயச்சான்று அ.சா. ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி மருத்துவர் கொடுங்காயம் என காயச்சான்று வழங்கியதால் வழக்கின் சட்டப்பிரிவை 281, 125(a) BNS ல் இருந்து 281, 125(b) BNS ஆக மாற்றம் செய்தேன். **அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா. ஆ. 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் 01.05.2025 ம் தேதி வழக்கின் அனைத்து புலன் விசாரணையும் முடித்து மேற்படி எதிரியின் மீது 281, 125(b) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

அ.சா. 2 அரங்கநாரன் கஸ்தூரியின் மருமகன் என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் சம்பவ சமயத்தில் அ.சா. 2 இருந்தாரா என்றும், அவருக்கு தெரிந்த நபர் பூபாலன் ஆட்டோவில் மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான், அங்கிருந்தவர்கள் ஆட்டோ மூலம் மருத்துவமனைக்கு அனுப்பியதாக உள்ளது. சம்பவயிடத்திற்கு எத்தனை மணிக்கு சென்றேன் என்றால் 11.30 மணிக்கு சென்றேன்.

சம்பவயிடத்திற்கு 10.30 மணிக்கு சென்றேனா என்றால் இல்லை. கண்ணுற்ற சாட்சிகளுக்கு நான் எதிரியை அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான், புகார் வாக்கமூலத்தில் எதிரியின் பெயர் உள்ளது. கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளின் முகவரியின் படி சம்பவயிடத்தை சாரந்தவர்கள் அல்ல என்றால் சரிதான்.

மாதிரி வரைபடத்தில் எவ்வளவு துாரத்திற்கு வரைபடம் வரையப்பட்டுள்ளது என்ற குறிப்பு இல்லை என்றால் சரிதான். சம்பவயிடத்திற்கம் அங்காள்ளம்மன் கோவிலுக்கும் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் சுமார் 50 மீட்டர் துாரம் இருக்கும். வரைபடத்தில் அங்காள்ளம்மன் கோவில், தீபம் மருத்துவமனை, முருகன் ஓட்டல்/இட்லி கடை ஆகியவை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் பேருந்து நிறுத்தம், கட்டுமான தொழிலாளர்கள் கூடும் இடம் என்றால் சரிதான். கூட்ட நெசிசல் மிகுதியாக இருக்கும் இடம் என்றால் சரிதான், காலையில் கூட்டமாக இருக்கும். கூட்ட நெசிசல் இருப்பதால் வாகனங்கள் மெதுவாக தான் செல்லும் என்றால் சரியல்ல, கூட்டம் ஓரமாக தான் இருக்கும். எனது விசாரணையில் சாட்சிகள் வேகத்தின் அளவீடு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா. 2 அரங்கநாதன் அவரது மனைவியை வேலைக்கு அழைத்து வந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

வழக்கின் எதிரியை ஒரு மாத காலதாமதமாக கைது செய்ததாக உள்ளது என்றால் சரிதான். பெயர் குறிப்பிட்டும் எதிரியை உடனடியாக கைது செய்யாததற்கு காரணம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், எதிரி தலைமறைவாக இருந்தார். எதிரி தலைமறைவாக இருந்ததாக வழக்கிற்காக ஜோடித்து சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் சிறப்பு உதவி ஆய்வாளர் என்றால் சரிதான். எனக்கு முதல் தகவல் அறிக்கை மற்றும் விசாரணை செய்ய அதிகாரம் உள்ளது என்றால் சரிதான். Police Standing Order 661 ன் படி வட்ட ஆய்வாளர் தான் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றால்

சரியல்ல, உதவி ஆய்வாளரும் வழக்கு பதிவு செய்யலாம். சிறப்பு உதவி ஆய்வாளர் காவல் நிலைய பொறுப்பு அதிகார ஆக இயலாது என்றால் சரிதான். புகார் நஷ்டயீடு பெற வேண்டி தவறுதலாக கொடுத்த புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து எதிரியை கைது செய்து பிணையில் விடுவித்தது தவறு என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்திற்கு செல்லாமல் ஆவணங்களை காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.